Regd. No. M விலை அணா 1

கறுப்பு சட்டைப் படையின் மேல் தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதற்காக கவலைப்படாதீர்கள்.

முரசொலி

தமிழ் வார வெளியீடு..... ஆசிரியர் மு. கருணாநிதி.

ஏனென்றால்.. திராவிடர் கழகத்தில் கறுப்பு சட்டைப் படை என்று ஒரு அமைப்பே இதுவரையில் கிடையாது.

முரசு 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, மாசி 27. (10-3-48) புதன்கிழமை [ஒலி 9

ஆரியம் பேசுகிறது!

இரணியன் மகன் பிரகலாதன். தந்தை என்ற வாஞ்சையைத் தவிடு பொடியாக்கி.... தந்தைக்கு எதிரியாக பிரகலாதனை ஆட்டிவைத்து இரணியனின் உயிர் குடித்து ஏப்பமிட்டேன்.

தென்னிலங்கை வேந்தன் இராவணனுக்கு இளையோன் விபீஷணன். அவனிடத்தில் ஆசை வலை விரித்தேன். அவன் சுருண்டான். இலங்கை இருண்டது. இராவணனை வஞ்சம் தீர்த்து வாழ்ந்தேன்.

வாலியும் சுக்ரீவனும் பிரிபடாத சோதரர்கள், குடும்பத்திலே தகராறு! அதை என் குல வளர்ச்சிக்குப் பயன்படுத்தி வாலி சுக்ரீவர்களை மோதவிட்டு வாலி வதைப் படலம் கண்டேன்.

எண்ணாயிரம் சமணப் பெரியோர்! எப்பாடுபட்டு சமணத்தை வளர்த்தனர் தெரியுமா? குலச்சிறையென்று ஒரு கோடரிக் காம்பு கிடைத்தான். அவனை சமணர் விரோதியாக்கி எண்ணாயிரம் பேரையும் துடிக்கத் துடிக்கக் கழுவேற்றி, களிப்பு கொண்டேன்.

அவ்வளவு ஏன்? காந்தியார் உயிரை கோட்சே உருவில் உறிஞ்சினேன். உலகம் தேம்பியழுத போது நான் தித்திப்பு வழங்கினேன்.

என் கோர சொரூபத்தை ஒரு சில திராவிட பத்திரிகைகள் எடுத்தெழுதின என்பதற்காக ஓமாந்தூராரை அதட்டிக் கேட்டேன்; "ஆரியத்துக்கு எதிர்ப்பா?" என்று! ஆட்சி பீடம் ஆடிற்று. அதன் எதிரொலி; இதோ!......... கறுப்பு சட்டைப் படையின் மேல் அடக்குமுறை!

என்ன முறைக்கிறீர்கள்? நான் நினைத்தால் ஓமாந்தூராரைக் கூட அரியாசனத்திலிருந்து அகற்றிவிட முடியும்.

உங்கள் இனத்தில் விபீஷண சுக்ரீவர் இருக்கும் வரையில் எனக்கு இந்த விருந்துதான்!

வெள்ளிப் பணம்.

[தில்லை-வில்லாளன்.]

சேலத்திலிருந்து நாமக்கல் போகும் வழியில் மூன்று கார்கள் பறந்து சென்றன. திடீரென ஒரு இடத்தில் கார்கள் நின்றன. அங்கு ஒரு கார் எரிந்து சிதைந்து கிடந்தது. பக்கத்தில் ஒரு பிணம் அலங்கோலமாகக் கிடந்தது.

கார்களிலிருந்து 'போலீஸ்' அதிகாரிகள் திடு திடுவென இறங்கினர். ஒரு காரிலிருந்து மட்டும் ஒரு கனவானும், ஒரு அழகு வடியும் நங்கையும் இறங்கினர்.

"அடே 1402! டாக்டரை அழைத்துக் கொண்டு போய் அந்தப் பிணத்தைக் காட்டு"

'போலீஸ் சர்க்கிள்' கட்டளை!

"டாக்டர் சார்! பிரேத சோதனையை சட்டென்று முடியுங்கள். பிணம் கெடுவதற்குள் ஊருக்குக் கொண்டுபோக வேண்டும்" என்றார் அந்த கனவான். அவரும் 'டாக்ட'ருடன் தொடர்ந்து சென்றார். பிணங்கிடக்கும் இடம் வரை இருவரும் பேசிக் கொண்டே சென்றனர்.

'சர்க்கிள்' சந்தானம் அந்த இடத்தை சுற்றிலும் ஆராய்ந்தார். காரை உற்று நோக்கினார். பிண நாற்றம் அடித்தது! சற்றுத் துருவிப் பார்த்தார். முன் பக்கங்களில் குருதிக்கறை பிடித்திருந்தது என்று புரிந்துகொண்டார். மேலும் மேலும் ஆராய்ந்தார். இரண்டு காலடிகள் இங்குமங்கும் ஓடியிருப்பது தெரிந்தது. இன்னொருவர் அடிகளின் சுவடு கோடு கிழித்தது போன்று அமைந்திருந்தது. அந்தச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றார்.

ஒரு இடத்தில் இரத்தம் தோய்ந்திருந்தது. அதைக் கண்டதும் ஆச்சர்யத்தால் அவரது கண்கள் அகல விரிந்தன. மேலும் சிறிது தூரம் சென்றார். ஒரு வெள்ளிப் பணம் கிடந்தது. பாதி இரத்தக்கறை பிடித்திருந்தது. அதை எடுத்து உடனே பத்திரப்படுத்தி விட்டார். பிறகு 'டாக்டர்' சோதனை செய்யுமிடத்திற்குச் சென்றார்.

"இது எதிர்பாராத விபத்தினால் ஏற்பட்ட மரணமே. காரில் ஏற்பட்ட திடீர் தீ விபத்திலிருந்து மீளத் துள்ளிக்குதித்த போது மேல் பாகத்திலே மண்டையில் தாக்கப்பட்டு இறந்திருக்க வேண்டும். உடம்பில் வேறெங்கும் எந்தவித காயமும் கிடையாது. இது சாவுதான், கொலையல்ல!"

என்றார் 'டாக்டர்' ராவ்.

அங்கே நின்று கொண்டிருந்த அந்த அழகி, இதைக் கேட்டதும், முகத்தை தன் கைகளில் புதைத்துக்கொண்டு அழுதாள். விம்மினாள். கதறினாள். அந்த கனவான் அவளை எரித்து சாம்பலாக்கி விடுபவர்போல பார்த்தார். இந்த பார்வையைக்கண்ட அவள் அழுகைக்குரல் நின்றது. ஆனால் கண்களில் மட்டும் நீர் ஊற்றென பெருக்கெடுத்தோடியது. இந்த மர்மக்கதையை 'சர்க்கிள்' சந்தானம் குறிப்பாகக் கவனித்தார்.

இந்த நேரத்தில் ஒரு கார் வெகு வேகமாக வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெண்ணும், ஒரு முரட்டு ஆளும் இறங்கி வந்தனர். பிணத்திடம் ஓடினர்.

"தம்பி! உனக்கு இப்படியா ஆண்டவன் எழுதிவைத்தான். கோபால்சாமி! இந்தக் கோரமரணத்திற்காகவா உன்னை மகனைப்போல வளர்த்தேன்"

என்று கதறினாள் அவள். பொருமினான் அவன்.

பிரேத விசாரணையைத் தொடங்கினார். ஒவ்வொருவராக அழைத்துக் கேள்விமேல் கேள்விகளைப் போட்டார்.

"நீங்கள் யார்?"

"என் ஊர் நாமக்கல். பெயர் சென்னியப்பக் கவுண்டர்!"

"இறந்தவரைத் தெரியுமா?"

"இறந்தவன் என் மோட்டார் டிரைவர் கோபால்சாமி. சிறு வயதிலிருந்தே என்னிடம் இருப்பவன். நம்பிக்கையுள்ளவன். நல்லவன்"

அந்தக் கனவான் சென்னியப்பக்கவுண்டரின் குரல் கம்மியது. அடுத்தபடி அந்த அழகி-அவள்தான் கவுண்டரின் மூன்றாவது காதல் மனைவி பானுமதி—கண்ணீரைத் துடைத்துக்கொண்டே கவுண்டர் சொன்னதை வற்புறுத்தினாள்.

"கோபால்சாமி என் தம்பிங்க. என் புருசன் செத்து பத்து வருடமாவுதுங்க. கட்டி மூணு வருசத்திலே செத்துப் போய்ட்டாரு. அதிலே இருந்து என் தம்பிதான் எனக்கு எப்பாடுபட்டாவது கஞ்சி ஊத்தி வந்து

(2-ம் பக்க தொடர்ச்சி)

துங்க. தம்பிக்கு தம்பியா; பிள்ளைக்கு பிள்ளையாய் வளர்த்தேனுங்க. நேற்று சேலம் போய்ட்டு வரேன் அக்கா என்று கிளம்பிச்சு. இன்னைக்கு இப்படி ஆச்சுதுங்க. நான் இனி என்ன செய்வேன் அடி ஆத்தாடி!''

கோபால்சாமியின் தமக்கை தனபாக்கியம் இடையிடையே அழுதுகொண்டே இப்படி சொல்லி முடித்தாள். அடுத்தபடியாக அந்த முறட்டு ஆள் விசாரிக்கப்பட்டான்.

''என் பெயர் இடும்பன். கோபால்சாமி என் உசிருக்கு உசிரானவன். நேற்று புறப்படுகிற வரையில் கூட இருந்தேன். நானும் கவுண்டரிடம் வேலை செயகிறவன்தான்''

இடும்பன் குரலை யாரோ அமுத்திப் பிடிப்பது போல நிறுத்தி நிறுத்திக் கூறினன். தொண்டையை ஏதோ வந்து அடைப்பது போல எச்சிலை விழுங்கினன்.

எல்லாவற்றையும் பதிவு செய்துகொண்டு, சாவுதான் கொலையல்ல என்று முடிவு கட்டி பிணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டு 'சர்க்கிளு'ம், அவரது பணியாளர்களும் கிளம்பினர். கவுண்டர் தனித்து அவர்களை அழைத்து சென்றார். ஏதோ சிறிது நேரம் பேசிவிட்டுத் திரும்பினர். பிறகு இரண்டு கார்கள் புறப்பட்டு சென்றுவிட்டன. கவுண்டர் உடனே பிணத்தை எடுத்து காரில் வைத்துக்கொண்டு புறப்பட்டார்.

* * *

'சர்க்கிள்' சந்தானம் தனது அறையில் தனது நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் எதனையோ சிந்தனை செய்து கொண்டிருந்தார். அவர் எதிரில் கிடந்த மேஜையின் மீது அந்த கறை பட்ட வெள்ளிப்பணம் இருந்தது. அவர் 'வில்ஸை' புகைத்துக்கொண்டு, வட்டமாகவும் நெளி நெளியாகவும் ஓடும் புகையை ஒரு கணம் பார்ப்பதும், மறுகணம் வெள்ளிப்பணத்தைப் பார்ப்பதுமாக இருந்தார். சிறிது நேரம் கழித்து எழுந்து குகையில் புலி உலவுவதுபோல உலவினர். ஒன்றும் புரிவதாகத் தெரியவில்லை.

உடனே விளக்கை அணைத்து படுக்கையறையினுள் நுழைந்தார். வத்சலா தூங்கிவிட்டாள். அவருக்கென்று வைக்கப்பட்டிருந்த பால் ஆறிக்கிடந்தது. அதனை எடுத்து ஒரு வாய் அருந்தி படுக்கையில் படுத்தார். தூக்கம் மெதுவாக அணைத்தது.

ஹா! ஹா!!.......... ஹா!!!

சிரிப்பொலி. அத்துடன் வளையல் ஒலி கலந்து வந்தது. சந்தானம் திடுக்கிட்டு எழுந்தார். ஒரு குலுக்கு நடைக்காரி உதட்டில் குறுஞ்சிரிப்பை சுமந்து நின்ருள். ஆனல் அவள் மண்டையிலிருந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. சட்டென்று துப்பாக்கியைக் கையிலெடுத்துக் கொண்டு, ஏற்கனவே தனது 'டார்ச்லைட்'டின் ஒளி வட்டத்தில் தெரிந்து கொண்டிருந்த அவளிடம் நெருங்கினர்,

''நீயார்'' அதட்டிக்கேட்டார்.

''நான்தான் வெள்ளிப்பணம். தெரியாதுபோலக் கேட்கிறீரே''

''உன் முகத்தில் ஏன் இரத்தம்?'' கொஞ்சம் குரலைத் தாழ்த்தினர்.

''உங்களைப்போன்ற உத்தமர்கள் செய்த கைங்கரியம்''

''ஏன் இங்கு வந்தாய்?''

''காரணத்தோடு. ஒரு பயங்கரக் கொலையின் உண்மையை உணர்த்த—கேட்பீரா? நீர் கேட்டாலும், கேட்காவிட்டாலும் இதனை நான் சொல்லவேண்டும்

டிரைவர் கோபால்சாமி—தானே சாகவில்லை. இரும்புக் கம்பத்தால் மண்டையிலடிக்கப்பட்டு இறந்தான். அடித்துக் கொன்றவன் அவனது ஆருயிர்த் தோழன் இடும்பன். கவுண்டரின் கட்டளையின் பேரில்தான் செய்தான்''

''அதிசயம்!''

''அதிசயம், ஆனல் உண்மை''

''இது உனக்கு எப்படித் தெரியும்?''

''இந்தக் கொலைக்கு நான்தானே முழு பொறுப்பாளி. இதற்கு மட்டுமென்ன! உலகத்தில நடக்கும் எந்த காரியத்திற்கும்—நன்மை பயப்பதானலும், தீமை விளைப்பதானலும்—நான்தான் அடிப்படை!''

''என்ன துணிச்சல்—கொலைகாரி!''

''நான் விசித்திரமான ஒரு அடிமை. என்னை எவன் வேண்டுமானலும் மணக்கலாம். புணரலாம். ஆனல் ஒருவனிடம் நிலைத்து நிற்பதும் இல்லை. எவனிடம் முதலில் கொஞ்சிக் குலவுகிறேனே, அவனையே அடுத்துக் கணத்தில கொல்லவும் தயங்க மாட்டேன். என் தொழில் அப்படி! இந்த விநோதமான குணத்துடன் வாழும் பெண்ணணங்கு வெள்ளிப்பணம்.''

(6-ம் பக்கம் பார்க்க)

முரசொலி

திருவாரூர்

பெரியார் ஆண்டு 69. மாசி 27
புதன் 10—3—48.

சோதனை நடத்துக!

‘‘ஏ! இந்திரனே! எதிரிகளை ஒழிக்க ஒரு வரம் தருவாய்’’

‘‘அக்கினியே! சூத்திரர்களை சுட்டுச் சாம்பலாக்க எழுந்தருள்வாய்!’’

அன்றொருநாள்—மாற்றாராம் திராவிடரை மாய்க்க ஆரியம் போட்ட மனு. அதே விண்ணப்பத்தைக் கொஞ்சம் புதுப்பித்து வேண்டுகோளை ஆணையாக மாற்றி......ஓமாந்தூரார் பக்கம் விழித்துப் பார்த்து “ஹே! ஓமாந்தூராரே! எங்கள் எதிரிகள் மேல் அடக்கு முறை பாணத்தை பிரயோகம் செய்வீராக” என்று கூறிற்று ஆரியம். இதோ சட்ட விரோதாஸ்திரம் பாய்ந்துவிட்டது. ஆட்சியாளர் எய்த அம்பு எப்பக்கம் பாய்வதெனத் தெரியாது தவிக்கிறது. கறுப்புசட்டைப் படையின் மேல் தாக்குதல்! படை இருந்தால் அல்லவா அங்கே-பாணம் பாய்வதற்கு!

திராவிடர் கழகம் தனியாக ஒரு படையமைத்து அதற்குப் பயிற்சி அளித்து - சதிக்கூடங்கள் அமைத்துக்கொள்ளா விட்டாலுங்கூட......கணை தொடுத்திருக்கின்றனர் காங்கிரஸ் சர்க்கார்! ஆகாயத்தில் கிளப்புகிற வெத்து வேட்டு இதுவெனக் கூறினாலும்.........இது திராவிடர்க்கு ஒரு எச்சரிக்கை வெடி என்பதை நாம் மறைக்க விரும்பவில்லை.

சட்ட விரோதத்தால், கறுப்பு சட்டை போட்டுக்கொள்வது—திராவிடர் கழக பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்துவது என்ற நமது லட்சியப் பாதை தடைபடுத்தப் படாவிட்டாலும் ஆரியம் அதையும் செய்யத் துவங்கும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில்; அதன் சுட்டுவிரல் அசைவிலே சுழலுகிற ஆட்சி இங்கு நடக்கிறது.

‘‘ஆரியமாயை அகலவேண்டும் வேறென்ன வேண்டும்’’ என்று பண் பாடியதற்காக கிடைத்த பரிசு இதுவா?

தாங்கமுடியாத அல்லல்களைத் தரை மட்டமாக்க தணியாத ஆர்வங் கொண்டு.. திராவிடரே! தரணியாண்டோம், தாழ்ந்தோம்.... இனி வாழ்வோம், என எக்காளமிட்ட இளைஞர்கட்கு இதுவா வெகுமதி?

சரிந்துபோகும் சமுதாயமே! சதிகாரர்களின் கோட்டையாகிறதே உன் நாடு! சழக்கர்கள் உன் இனஉணர்ச்சியைவேட்டையாடுகிறார்களே; சாய்ந்து போகாதே! நிமிர்ந்துநில்! எனச் சங்கம் முழங்கிய இளஞ் சிங்கங்களுக்கு இதுதானா சன்மானம்?

இந்தக் கேள்விகளைக்கேட்டு, திராவிடத்தைச் சுற்றியுள்ள கடல்கள் கொந்தளிக்கின்றன! தென்றல் காற்றுகூட சூடேறி வீசுகிறது?.........நிலவின் ஒளிகூட நெருப்பாகக்கொட்டுகிறது. ஓமாந்தூரார் உணர்ந்து பார்ப்பாரா? ஆரியத்தின் பேச்சைக் கேட்டுஅவசரப்பட்டு விட்டோம் என்பதை ஆலோசிப்பாரா?

சூது எதுமறியா சூரர்களின் பணிமனைகளில் சோதனையாம்! அமைதியை, ஆயுதமாகக் கொண்ட அன்புப் படைமுகாம்களில் ஆராய்ச்சியாம்! பெரியாரின் வார்த்தைக்கு மறு வார்த்தைபேசாது...தலைவர் ஆணையை தலைமேற் கொண்டு, வாளெடுக்கும் கையிருந்தும், துப்பாக்கி பிடிக்கத்துணிவிருந்தும்,நினைத்த மாத்திரத்தில்.... ஆயிரமாயிரம் அணிவகுப்புக்களை நிர்மூலமாக்கும் ஆண்மையுள்ள சந்ததியில் பிறந்திருந்தும்.......பொறுமையை ஆபரணமாகக் கொண்டிருந்த தோழர்கள் வீடுகளில், போலீசார் முற்றுகையாம்!

சோதனையிடவேண்டிய இடம் சூழ்ச்சி யறியா திராவிடர் நிலையங்களா? இல்லை! இல்லை!!.....

அதோ!' ஆரியத்தின் உள்ளம்! அந்த அநியாய உள்ளத்தை ஆராய்ச்சி செய்து பாருங்கள். அங்கே அகப்படும், மக்களை வகுப்புக்களாகப்பிளக்கும் மதக் கோடரிகள்! திராவிட இனத்தின் மேல்எறியவைத்திருக்கும்வஞ்சக ஈட்டிகள்! சமுதாயத்தை மோதவிட்டு......சந்தோஷமடைவதற்காக தயாரித்து இருக்கும் சதிக்கடிதங்கள்!

ஆட்சியாளரின் கவனம் செல்லவேண்டிய சதிக்கிடங்கு அது! பொச்சரிப்பும் பொறாமையும் நிரம்பியிருக்கும் வெடிமருந்துச்சாலை அது! போலீசார் புகமுடியாத இடம்.......செங்கோலேந்தியவர்களின் சிந்தனை செல்லவேண்டிய இடம்! அங்கே நடத்துக சோதனை! அவசியமாக! அவசரமாக!

★

தடையுத்தரவும் தடுமாற்றமும்!

ஒருவர் அவசர அவசரமாகத் தலைமயிரில் தேன் தடவிக்கொண்டார். ஏன் என்று கேட்டேன். கறுப்புக்குத் தடையுத்தரவாமே என்று பதில் கூறினர்.

ஒரு தலை நரைத்த கிழவர் மூடிய கண்களைத் திறக்காமல் உட்கார்ந்திருந்தார். "ஏனய்யா?" என்று வினவினேன். கறுப்புக்குத் தடையப்பா......அதனல் கருவிழிகளைக் காட்டாமல் உட்கார்ந்திருக்கிறேன் என்றார்.

சோவெனப் பெய்யும் மழையிலே நனைந்து செல்கிற ஒருவர் குடையை மடக்கி ஒரு வெள்ளைத்துணிக்குள் மறைத்துக் கொண்டு ஓடினர். இதென்ன வேடிக்கை என்று கேட்டேன். வேடிக்கையில்லை....கறுப்புக்குத் தடையுத்தரவு என்று கூறிக் கொண்டே ஓடினர்,

கறுத்த ஒரு மனிதன் தன் உடம்பெல்லாம் வெள்ளை வர்ணம் பூசிக்கொண்டிருந்தான். இதென்னப்பா வேஷம் என்று சிரித்தேன். சிரிக்காதே தம்பி! கறுப்புக்குத் தடை என்றான்.

கறுப்பு சட்டைப் படைக்கு மட்டுமே தடையுத்தரவு என்பதைப் புரிந்து கொள்ளாமல்.. "கறுப்புசட்டை போடுவதே ஒழிந்தது" என்று கருதுகிறவர்களும், கறுப்பு வர்ணமே இருத்தலாகாது என்று கருதுகிறவர்களும் இந்த சூழ்நிலையில் ஒரே ரகம்தான் என நினைத்து நினைத்து சிரித்தேன். இன்னும் சிரிப்பு அடங்கவில்லை ..... சிரித்துக் கொண்டே இருக்கிறேன்.

★

18-வது திராவிடர் கழக மாகாண மாநாட்டின் வரவேற்பு குழு.

தூத்துக்குடியில் நடைபெறப் போகும் 18 வது திராவிடர்கழக மாகாண மாநாட்டின் வரவேற்பு குழு அமைக்கும் கூட்டம் 14-3-48 ஞாயிறுமாலை 5 மணிக்கு தூத்துக்குடி நகர திராவிடர் கழகத்தில் நடை பெறும். அது சமயம் அழைப்புகள் பெற்ற தோழர்கள் வந்து கலந்து கொண்டு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

K. V. K. சாமி
செயலாளருக்காக.

திருமணம்.

26—2—48 வியாழன் இரவு மதுக்கூர் ஜ. கா. நத்தர் சாகிபுக்கும், முரசொலி ஏஜண்ட் M S. அதால்டியின் சகோதரி பாத்திமாபீவி அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது.

கறுப்புடையணிந்து நாட்டின் களங்கம் அகற்றுக!

கழக செயற்குழுவின் முடிவு.

7—3—48 காலை சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழக நிர்வாக கமிட்டி கூட்டத்தில் உத்தமர் காந்தியாரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப் பட்டது.

சர்க்கார் தடையுத்தரவால்— கழக அங்கத்தினர்கள், பொது மக்கள் தங்களுடைய வேலைகளையும், மற்றும் உறுப்பினர் சேர்த்தல், கழகங்கள் தோற்றுவித்தல் சமுதாய இழிவை நினைவில் வைத்திருப்பதற்கு அறிகுறியாக கறுப்புடை அணிதல், அதை பரப்புதல், இழிவு நீக்கப் பிரச்சாரம் செய்தல், ஆகிய காரியங்களில் சிறிதும் மாறுதல் இல்லாமல் முன்னிலும் அதிகமான ஊக்கத்தோடு, முன்னிலும் அதிகமாக சாந்தமும் சமாதானமுமான தன்மையில் தொண்டாற்றி, கழக லட்சியத்திற்கு வெற்றி கிடைக்கச்செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

எந்த நெருக்கடியையும் சமாளிக்கத் தயாராகத்தான் இருக்கிறோம்.

சென்னையில்— பெரியார் ஈ. வே. ரா.

"சிறைக்கூடம்புகத் தயங்கமாட்டோம்"

சென்னையில்—அறிஞர் அண்ணாத்துரை.

(3-ம் பக்க தொடர்ச்சி)

"கொலையைப் பற்றி வேறென்ன தெரியும்?"

"வேறு என்ன, கொலை முழுவதுமே தெரியும். அணுவணுவாகச் சொல்கிறேன். கேள்!

சென்னியப்பர் காமப்பித்தர். மனைவியர் இருவரும் வெகு விரைவிலேயே மாண்டனர். தனது ஏராளமான சொத்துக்களை கட்டியாள பிள்ளை வேண்டும் என்று தவித்தார். பெண் பார்க்க என்னை அனுப்பினார். பானுமதியைக் கூட்டி வந்து விட்டேன். அவளுடன்தானே இருக்கவேண்டும். வக்கீல் வரதாச்சாரியார் வீட்டிற்கு வழக்கு சம்பந்தமாகப் போகத் தொடங்கினார். என்னை இழுத்துச் சென்றார். வழக்குக்கு மட்டும் வக்கீல் வீடு பயன்படவில்லை. இன்ப கேளிக்கை விலாசமாகவும் மாறியது.

பானுமதியின் பசி வளர்ந்தது. கவுண்டரின் கள்ள லீலைகள் குறையவில்லை. வரவரப் பெருகிவந்தது.

ஒரு நாள் கவுண்டர், வக்கீல் வரதாச்சாரியுடன் சென்னைக்குப் புறப்பட்டார். கோபால்சாமி அவர்களை இரயிலடியில் கொண்டுவிட்டுவந்து காரை நிறுத்தினான். அப்பொழுது இரவு மணி பத்து. மாடியில் பானுமதி நின்று கொண்டிருந்தாள்.

"கோபால்சாமி! ஐயா ஊருக்குப் போய்விட்டாங்களா?"

"போய்க்கொண்டே இருப்பாங்க"

"அப்படியே ஏறி மாடிக்கு வாயேன்"

"ஏன் அம்மா?"

"அறையில் ஒரே புழுக்கம். அதனால் வெளியே படுத்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன். எனக்குத் தனியாகப் படுத்துக்கொள்ள பயமாயிருக்கு. நீ இங்கேயே படுத்துக் கொள்ளேன்"

"ஏன் அம்மா, சமையல் செய்யும் கிழவி எங்கே?"

"அந்தக்கிழம் இந்நேரம் குறட்டை விட்டிருக்கும்"

"அப்படியானால் கீழேபோய் பாய், தலையணை........."

"வேண்டாம், ஐயா படுக்கையிலேயே படுத்துக்கொள்"

"அ...ம்...மா ....அதெல்லாம் வேண்டாம்"

பானுமதி, உடனே "அடி, வெள்ளிப்பணம்" என்றாள். அவனிடம் என்னைக் கூட்டிவிட்டாள். அவன் என் சுகத்தால் போதையானான். பஞ்சணைக்கு அன்று உடம்புவலி.!

இந்தக் காமவேட்டை பரவியது. கவுண்டர் செவிக்கு எட்டியது. ஒருநாள், ஐயோ! காரினுள்ளேயே கோபால்சாமியும் பானுமதியும்..........கவுண்டர் பார்த்து விட்டார். நேராக தோட்டத்திற்குள் நுழைந்தார்.

"இடும்பா..........."

"எஜமான்"

"அடே, கோபால்சாமியை என்ன நினைக்கிறாய்"

"என் உசிருக்கு உசிரு"

"சீ, கழுதை இங்கே வா"

கவுண்டர் காதுக்குள் எதனையோ சொன்னார். இடும்பன் முகம்விகாரமடைந்தது. உடனே என்னை இழுத்து அவன் கையில் கொடுத்து விட்டார். என்னைப் பார்த்ததும் சிரித்தான்.

"ஆகட்டுங்க" என்றான்.

அன்று இரவு இடும்பனுந்தான் காரில் போனான். சாராயக் கடையில் நிறையக் குடித்தான். கோபால்சாமியும் குடித்தான். இருவரும் போய்க் கொண்டிருக்கையில்தான் கார் நின்றது. சரிபார்க்க கோபால்சாமி முயன்றுகொண்டிருந்தான். போதையினால் கையிலிருந்த சுருட்டை நெருப்புடன் காரிலேயே நழுவவிட்டான் இடும்பன். இரண்டு கருங்கற்களைத் தேடி கோபால்சாமி அலைந்து திரியும்போது பின்னாலிருந்து இரும்புத் தடியால் தாக்கினான். இரத்தம் பெருக்கெடுத்தது. இதே நேரத்தில் கார் தீப்பிடித்துக் கொண்டது! ஒரே அடியில் உயிர் நீத்த அவனை காரின் அருகில் இழுத்துப் போட்டுவிட்டு இடும்பன் ஓடினான். அப்படி ஓடும்போதுதான் நான் தவறி விழுந்தேன்"

"பயங்கரமான கொலை"

"இத்தனைக்கும் காரணம் நான், வெள்ளிப்பணம் விசித்திரமான அடிமைப் பெண் மட்டுமல்ல, விநோதமான பிறவி! தொட்டால் துவளுவேன். ஒன்றுக்குள் ஆயிரம் இரண்டாயிரம் பெண்களாக இருப்பேன். தேய்வதுபோலவே, வளர்வேன். என் கடைசி சொட்டு இரத்தத்திற்கும் உயிர் உண்டு. பாரேன் என் சக்தியை. என்னால் பானுமதி வந்தாள். வக்கீல் மனைவியும் படுக்கையை விரித்தாள். பானுமதியும் என்னைக் காட்டித்தான் கோபால்சாமியை மடக்கி

(8-ம் பக்கம் பார்க்க)

அவரது கருத்து!

அமைப்பும் — ஆண்டவனும்.

(ஜீன்மெஸ்லியர்)

இவ்வுலக அமைப்பைக் கொண்டே, இதை ஆளும் ஒரு அறிவுடைய ஜீவன் இருந்துதானாகவேண்டுமென்று மறுக்க முடியாமல் நிரூபித்துவிடலாம் என்று கடவுளை வணங்குகிறவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த உலக அமைப்பிற்குக் காரணம் அவசியமான சில அசைவுகளேயாகும் என்பதையும் அவ்வசைவுகள் சில சமயங்களில் நமக்கு சாதகமாகவும், சில சமயங்களில் பாதகமாகவும் இருக்கின்றனவென்பதையும் இவர்கள் உணர்கிறதில்லை. நமக்குசாதகமாயிருக்கும் நிகழ்ச்சிகளை நாம் ஆதரிக்கிறோம்; பாதகமாயிருப்பவைகளை வெறுக்கிறோம்.

ஆனால் இயற்கை எப்போதும் தன் வழியே போய்க்கொண்டுதானிருக்கிறது. அதாவது இன்னின்ன காரணங்களுக்கு இன்னின்ன காரியங்கள்தான் நிகழுமென்ற இயற்கை விதிகளை அனுசரித்தபடியேதான் இருக்கிறது. அவ்விதிகளினின்றும் மாறுபட்டு வேறுவிதமான காரியங்கள் நிகழுவதே கிடையாது. ஆனால் நமக்குத் தெரிந்த காரியங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தால் நாம் சர்வசாதாரணமாய் இருந்துவிடுகிறோம். ஆனால், நமக்கு ஏற்கனவே தெரியாத ஏதேனும் புதிதான காரண காரியங்கள் நிகழுமாகில் அவைகளை உடனே "அற்புதங்கள்" என்று சொல்லிவிடுகிறோம். ஆனால், எல்லாம் இயற்கையாகவேதான் நடைபெறுகின்றனவென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த "அற்புதங்களை" கண்டதும் நமக்கு அவைகளின் காரணங்கள் புலப்படாததினால், அவைகளைவிட இன்னும் குறைவாகத் தெரிந்த (ஒன்றுமே தெரியாத) ஒரு காரணத்தை (கடவுளை) கற்பித்துவிடுகிறோம். உலகமானது என்றும் கட்டுப்பட்டு ஒரு ஒழுங்கின்பேரில்தான் நடைபெற்று வருகிறது. ஒழுங்கு மீறி என்றும் நடப்பதேயில்லை. ஆனால், ஒழுங்கு குலைகிறது. என்று சொல்வோமேயானால், நம்முடைய அமைப்பிலேயே ஏதோ பிழையிருப்பதாகத்தான் அதற்கு அர்த்தம். உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவனும், ஒவ்வொரு வஸ்துவும், ஒவ்வொரு அணுவும், நாம் ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, ஒரே சட்டத்தின் கீழ் கட்டுப்பட்டுத்தான் நடைபெறுகின்றன. கனமான வஸ்துக்கள் விழுவதும், ஆறுகள் ஓடுவதும், சமுத்திரத்தின் அலைகள் அசைவதும், காற்று அடிப்பதும், மழை பெய்வதும் கடவுள் கிருபையால் நடைபெறுகின்றனவென்று சொல்வதோடு, அவருடைய அநுக்கிரகத்திற்காக அவரைப் புகழவும் செய்கிறோம். ஆனால், உண்மை என்னவென்றால், பூகம்பங்கள், எரிமலைகள், வெள்ளப்பெருக்குகள், தொத்து நோய்கள், பஞ்சங்கள் இவைகளுக்கெல்லாம் எந்த இயற்கையானது காரணமாயிருக்கிறதோ, அதே இயற்கைதான் மேற்கூறிய சம்பவங்களுக்கும் காரணமாக இருக்கிறது.

உலகத்திற்கு ஒரு இயற்கை அமைப்பு காரணமாயிருக்கிறதென்பதைக் கேட்க ஆச்சரியப்படுவது எப்படி இருக்கிறதென்றால், உலகத்தில் இன்ன காரணங்களால் இன்ன காரியங்கள்தான் நிகழும் என்ற விதிகளைக் கண்டு ஆச்சரியப்படுவது போலவேயாகும். ஒழுங்கிற்கு விரோதமான நிகழ்ச்சிகளைக்கண்டு பயப்படுவதானது, காரண காரியங்கள் வேறுபடுவதினால் ஏற்படும் மாறுபாடுகளை மறந்ததாகவேயாகும். இயற்கையின் ஒழுக்கங்களைக்கண்டு ஆச்சரியப்படுவதானது, உலகத்திலுள்ள ஒவ்வொன்றையும் கண்டு ஆச்சரியப்படுவதாகவேயாகும். அதாவது, தன்னைத் தானே கண்டு ஆச்சரியப்படுவதையொக்கும். ஒருஜீவனுக்கு, ஒழுங்காக இருப்பது ஒழுங்கற்றதாகத்தானிருக்கும். கொடூரமான ஜீவன்களெல்லாம், தங்களிஷ்டப்படி சுமக்க முடியாதவைகளையெல்லாம் ஒழுங்குமீறி இருப்பதாகத்தான் கருதுகின்றன. தங்களுடைய கொடுமையை செலுத்துவதற்குத் தடைகள் ஏற்படும் போதெல்லாம் உலகிலுள்ள ஒவ்வொன்றும் ஒழுங்கு மீறி இருப்பதாகவேதான் அவைகளை நினைக்கின்றன.

அதெல்லாம் போகட்டும். கடவுளே இயற்கைக்குக் காரண கர்த்தாவாகவும், இயற்கையை நடத்தும் சக்தியாகவும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்படியானால், உலகிலுள்ள ஒவ்வொரு ஒழுக்கத்திற்கும்

அவரேதான் காரணமாக வேண்டும். அவர் எந்தெந்த வஸ்துக்களுக்கு எந்தெந்த சக்திகளை கொடுத்திருக்கிறாரோ அந்தந்த வஸ்துக்கள் அந்தந்தச் செயல்களைச் செய்துதான் தீரவேண்டும் கடவுள் சாதாரண நடைமுறை விஷயங்களை 'மாற்றுவதென்றால் அவருடைய மாறாத் தன்மைக்குப் பங்கம் ஏற்படுகிறது. அவருடைய உலகில் ஒழுங்கே நிலவுவதாகவும், அதிலிருந்தே அவர் இருப்பது ருசுவாகிறதென்றும், அவருடைய அறிவு, சக்தி, நற்குணம் முதலியவைகளுக்கும் அதுவே அத்தாட்சி யென்றும் சொல்கிறார்கள். இது உண்மையானால், இவ்வுலகின் ஒழுங்கில் உள்ள முரண்பாடுகளுக்கும் அவரே கர்த்தாவென்று ஏற்படுகிறது. அப்போதே அவர் இருப்பதே தகராறாகிவிடுகிறது. அல்லது அவருககு திடபுத்தி கிடையாது என்று ஏற்படுகிறது. அல்லது சக்தியில்லை யென்று ஏற்படுகிறது. அல்லது முன்யோசனையில்லையென்று ஏற்படுகிறது. அல்லது முன் ஜாக்கிரதையில்லை யென்று ஏற்படுகிறது. ஆகையால் அவர் உபயோகப் படுத்த வேண்டிய சாதனங்களிலும், ஆயுதங்களிலும் அவர் பெரும் பிழை செய்துவிட்டார் என்று அவர்மேல் நாம் நியாயமாகக் குற்றம் சாட்டலாம். கடைசியாக இயற்கையின் ஒழுங்கானது கடவுளின் சக்தியையும், அறிவையும் நிரூபிக்கிறதென்று சொன்னால் அதிலுள்ள ஒழுங்கீனங்கள் அவருடைய பலஹீனத்தையும் திடமில்லாக் குணத்தையுமே நிரூபிக்கும்.

கடவுள் எங்கும் இருக்கிறார் என்று சொல்லுகிறீர்கள்; அவர் எல்லா இடத்தையும் நிரப்பிக் கொண்டிருக்கிறார் என்கிறீர்கள்; அவனன்றி ஓரணுவும் அசையாது என்கிறீர்கள்; அவரே எல்லாவற்றிற்கும் கர்த்தா என்கிறீர்கள். இதெல்லாம் சரியென்றே ஒப்புக்கொண்டால், உலகிலுள்ள ஒழுங்கீனங்களுக்கும், கஷ்டங்களுக்கும் உங்கள் கடவுளே பொறுப்பாளியாவார் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். இயற்கையை சின்னபின்னப் படுத்துகிறவரும் உங்களுடைய கடவுளேயாகும். குழப்பங்களுக்கெல்லாம் அவரே காரணமாயிருக்கிறார். மனிதனிலும் அவரே இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படியானால் மனிதன் பாவம் செய்யும் போதும் அவரே அவனை ஆட்டுகிறார் என்பதையும் ஒப்புக் கொள்ளவேண்டும். கடவுள் எங்கும் இருப்பவராயிருந்தால் அவர் என்னிடத்திலும் இருக்கிறார்; என்னோடு அவரும் அசைகிறார், நான் ஏமாற்றப்படும்போது அவரும் ஏமாற்றப்படுகிறார்; கடவுள் இருப்பதை நான் ஆட்சேபிக்கும்போது அவரும் சேர்ந்து ஆட்சேபிக்கிறார். கடவுளை நான் கோபப்படும்போது அவரும் சேர்ந்து கோபப்படுத்துகிறார்.

ஓ! மதாபிமானிகளே! ஆஸ்திகர்களே! கடவுளைப்பற்றி பேசும்போது, நீங்கள் சொல்வது இன்னது என்பது உங்களுக்கே தெரியவில்லை யென்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

★

திருச்சியில்

'தூக்குமேடை'

தேதியை எதிர்பாருங்கள்



தில்லை வில்லாளன்:

வெள்ளிப் பணம்.

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

னான். உயிருக்குயிர் நண்பர்களை பிரித்து ஒருவனை கொலைகாரனாகவும் மாற்றிவிட்டது எனது இதழ்தந்த போதை! இது கிடக்கட்டும்; சொந்த அக்காள், இத்தனை உண்மையும் அறிந்தவள், என்னைக் கண்டதும் தம்பியை மறந்துவிட்டாள். சுற்றித் திரிவானேன்! என் இன்பம் கிடைக்குமென்று டாக்டர் புளுகினார். நீரும் கடமையை மறந்து, உண்மையை ஒருவாறு ஊகித்தும் விட்டுவிட்டீரே''

''வெள்ளிப்பணத்தின் வினோத விளையாட்டு''

சந்தானம் குளறினார். அவர் மனைவி வத்சலா 'கனவிலும் லஞ்சமா?'' என்று தட்டி எழுப்பினாள், சந்தானம் திடுக்கிட்டு எழுந்தார். தன் அறைக்கு வேகமாகச் சென்றார்.

கறைபட்ட வெள்ளிப் பணம் கண்ணைச் சிமிட்டிற்று! ★

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
மு. கருணாநிதி திருவாரூர்.
அச்சிடுபவர்:- கருணை. எம். ஜமால்,
கருணாநிதி (மின்னியக்க) அச்சகம்,
விஜயபுரம்.